394

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்



SEP 1946
394
3L
M46.37.2
210004

Venkatachalam S. 1941-43.

Editor & Publisher: ... Lourduswami, B.A., L.T.
R.C. ... ning School, Trichinopoly.

கொ... ஆகஸ்டு 1946 மலர் 2

R. ... முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதனு விஷயப் பூங்கொத்து

கொத்து 37] 15 ஆகஸ்டு 1946 [மலர் 2

பத்திராதிபர் குறிப்புகள்

ஹையர் எலிமேண்டரி கிரேடு ஆசிரியர்களும், S.S.L.C. பரீட்சையும்

இந்த மகுடத்துடன்கூடிய அரசாங்க அறிக்கையொன்றை நமது "பூங்கொத்தின்" மார்ச்சுமாத மலரில் (கொத்து 36, மலர் 9, பக்கம் 148) நாம் பிரசுரித்திருந்ததை நம் நேயர்கள் கவனித்திருப்பார்கள் என்று நம்புகிறோம். எனினும் சிலர், ஷை விஷயமாக அடிக்கடி "தகவல்" தெரிவிக்கவேண்டுமென எழுதிக்கொண்டிருக்கின்றனர். ஆகவே, மீண்டும் நாங்கள் முன் கூறியதையே, கூறவேண்டியதாய் இருக்கின்றது. அதாவது :—

"G. O. M. S. No. 344, Education, 19th Feb. 1946 உத்தரவின்படி, ஹையர் எலிமெண்டரி கிரேடு பயின்று, தேர்ச்சி பெற்று, அங்கீகாரமான பாடசாலைகளில் **மூன்று வருஷங்களுக்குக் குறையாமல்** வேலை செய்துள்ள ஆசிரியர்கள், S. S. L. C. பரீட்சைக்கு "ப்ரைவேட்" (Private) மாணவர்களாகப் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவார்கள். இவர்களுக்குப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்ததாக யாதொரு ஆஜர் நாட்கள் (School attendance and Days) தேவை இல்லை என்பதே.

சாதாரணமாக மார்ச்சு மாதத்தில் நடைபெற்று வருகின்ற S. S. L. C. பரீட்சைதான் இவர்களுக்கும். ஆகவே அடுத்த 1947-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் நடைபெறும் S. S. L. C. பரீட்சையில் தொடங்கி 1950-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் நடைபெறும் ஷை பரீட்சையுடன் இத்தகையோருக்கு ஷை அனுமதி (Concession) முடிவுறும். அதாவது இவர்களுக்காக ஏற்பட்டிருக்கும் அனுமதி (Concession) 1947, 1948, 1949, 1950 ஆக இந்த 4 நான்கு வருஷங்களுக்குத்தான் செல்லுபடியாகும்.

இவ்வாறு S. S. L. C. பரீட்சை எழுதித் தேர்ச்சி பெற்றவர்களில், **புதுத் திட்டப்படி** (Revised Scheme) எலிமெண்டரி கிரேடு T. S. L. C. பரீட்சையில் **பாஸ்** (Pass) செய்துள்ளவர்கள், ஸெக்கண்டரி கிரேடில் சேர்ந்து போதனுமுறைப் பயிற்சி **பெறமலே** "ப்ரைவேட்" (Private) மாணவர்களாக ஸெக்கண்டரி கிரேடு T. S. L. C. பரீட்சை எழுதலாம்.

SEP 19

பழைய திட்டத்தின்படி (Old Scheme) ஹையர் எலிமெண்டரி T. S. L. C. பரீட்சை எழுதித்தேர்ந்தவர்கள், ஸெக்கண்டரி கிரேடில் சேர்ந்து பயின்றுதான் ஸெக்கண்டரி கிரேடு T. S. L. C. பரீட்சை எழுதவேண்டும்.

[குறிப்பு : 1] புதுத் திட்டத்தின்படி எலிமெண்டரி கிரேடு 'பாஸ்' செய்தவர்கள் **ப்ரைவேட்டாக** S. S. L. C. பரீட்சை எழுதித் தேர்ந்தவுடன் **ப்ரைவேட்டாக** ஸெகண்டெரி கிரேடு T. S. L. C. பரீட்சை எழுதலாம்.

ஆனால், பழைய திட்டத்தின்படி ஹையர் எலிமெண்டரி "பாஸ்" செய்தவர்கள் "ப்ரைவேட்டாக" S. S. L. C. பரீட்சை எழுதித் தேர்ச்சிபெற்றவுடன், **போதனுமுறை ஸெக்கண்டரி கிரேடில் சேர்ந்து,** போதனுமுறைப் பயிற்சி பெற்றுதான் T. S. L. C. பரீட்சை (Secondary Grade) எழுதவேண்டும்.

[குறிப்பு : 2] T. S. L. C. புதுத் திட்டத்தின்படி (Revised Scheme) முதல் பரீட்சை 1942-ம் வருஷத்தில் நடைபெற்றதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளத்தகும்.

[குறிப்பு : 3] மேற்கண்ட விஷயமாய் S.S.L.C. பரீட்சைக்குரிய பாட புத்தகங்கள் (Text Books) பாடங்கள்-இஷ்டப்பாடங்கள் Optional subjects முதலிய விவரங்களைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள், தங்கள் தங்களுக்குச் சமீபத்திலுள்ள High School-க்குச் சென்றோ அல்லது High School ஆசிரியர்களைக் கண்டோ தேவையான தகவல்களைத் தெரிந்துகொள்ளவும்; அவ்வாறின்றி எங்களை அவ்விஷயமான தகவல் கேட்பது அனுவசியமாகும்.

ஆரம்பப் பாடசாலைகளுக்கு "டீச்சிங் கிராண்டு" (Teaching Grant) உயர்வு.

நமது சென்னை மாகாணத்தின் இவ்வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் (Budget) ஆரம்பப் பாடசாலைகளுக்கெல்லாம் "டீச்சிங் கிராண்டு" உயர்த்தப்பட்டிருக்கிறதாகப் பத்திரிகைகளின் வாயிலாக அறிகிறோம். அதாவது எலிமெண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் ரூ. 14-ல் இருந்து ரூ. 16-க்கும், அவ்வாறே ஆரம்பப் பாடசாலைகளில் வேலைசெய்யும் ஸெக்கண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் ரூ. 18-ல் இருந்து ரூ. 20-க்கும் உயர்த்தப்போகிறதாகத் தெரியவருகிறது.

அவ்வாறாகின், அது மகிழ்ச்சிக்குரியதே.

* * * *

21004
சென்னை-600 003

T. S. L. C. Examination 1946

Details of failures in the Elementary Grade

(For list of passes, please see last issue)

Reg. No.	Names			Groups in which failed
5160	I. James Masilamony	...	...	A C D
5170	B. Abdul Razak	...	...	A B D
5180	L. S. Ramachandran	...	...	D
5183	B. Chinnasamy	...	...	B
5186	M. Periasamy	...	...	All
5229	M. Manickam	...	...	A C
5233	O. Maria Suvaikeen	...	...	All
5205	R. Sambasivam	...	...	D
	Old Students			
5215	V. Natarajan	...	...	B C
5221	Y. Savarimuthu	...	...	C
5227	E. Thathan	...	...	A B
5908	V. Gnanadickam	...	...	A B C

புழுதிபடிந்த பொன்மொழி

[D. Nathan]

'ங'ப்போல் வளை என்னும் ஔவை வாக்கின் அருமையை அறிய மாட்டாதார் சிலர் "ங" என்ற எழுத்தின் வடிவம் அதிக வளைவுடைய தாக இருப்பதைக்கண்டு அதைப்போல நீயும் வளைதல் வேண்டும் எனப் பொருள் கூறிச்செல்கின்றனர்.

'ங' எனைய தமிழ் எழுத்துக்களைவிட அதிக வளைவுடையதாயிருப் பதை நோக்கின் அதற்கு அதுவே பொருள்போலத் தோன்றுகிறது. எனி னும் உடலை வளையாது பாதுகாக்கவேண்டியதிருக்க முடிந்தவரை வளைக்க வேண்டுமென ஔவை கூறியது தன்னைப்போல எல்லோரும் கூன் முது குடையவர்களாக வேண்டுமெனக் கருதியா? இல்லை.

"ங" முதல் ஙௌ ஈறாக உள்ள 12 உயிர் மெய் எழுத்துக்களில் 'ங' என்ற ஓர் எழுத்துமட்டும் சொற்களில்வந்து வழங்குகிறதே ஒழிய மற்றவை வழங்குவதில்லை. தமிழ் மொழியில் வேலையில்லாத இப்பதி னொரு எழுத்துக்களையும் ங என்ற ஓர் எழுத்து அழியாது காப்பாற்றிவரு வதுபோல உயர் நிலையிலுள்ள நீயும் உன் சுற்றத்தார்களை தழுவிக் கொண்டு காப்பாற்று என்பதே அதன் பொருளாகும்.

பாடக்குறிப்பு

[A. Isaac.]

பாடம் : தமிழ். **வகுப்பு :** II.

நோக்கம் : பிள்ளைகளுடைய சொல் தொகுதியைப் பெருக்குவதற்காக "பறவைகள்" என்ற பாடத்திலிருந்து முதல் இரண்டு பாராக்களைப் படித்தல்.

உபகரணங்கள் : சேவல், வாத்து, அசல் பறவைகளும், இவற்றின் படமும்; கிளி, மயில், காகம் இவற்றின் படங்களும்.

பீடிகை : உன் வீட்டில் பறவைகளை வளர்க்கிறார்களா? என்னென்ன பறவைகளை வளர்க்கிறார்கள்? உனக்கு எந்தப் பறவையின்மீது பிரியம் அதிகம்? என்? அதற்காக நீ என்ன செய்துகொண்டுவருகிறாய்?

விஷயம்	முறை
புது அறிவு :	
ஆண் கோழிக்குச் சேவல் என்று பெயர்.	(சேவலைக் காட்டி) இது என்ன? பிறகு (சேவலின் படத்தைக் காட்டி) அதன் கீழ் எழுதியிருக்கும் வார்த்தையைப் படிக்கச் செய்க. எது பெட்டைக்கோழி? எது சேவல்? எதற்காக நாம் கோழிகளை வளர்க்கிறோம்?
சேவல் அதிகாலையில் கூவும்.	சேவல் எப்பொழுது கூவுகிறது? நீ சேவல் கூவுவதைப்போல் கூவு! சேவல் கூவும் சப்தம் கேட்டதும் ஜனங்கள் என்ன செய்கிறார்கள்? நீ படுக்கையிலிருந்து எப்பொழுது எழுந்திருக்கவேண்டும்? தெரியுமா?
அது அதிக உயரம் பறக்காது.	அதிக உயரம் பறக்கக்கூடிய ஒரு பறவையின் பெயரைச் சொல்லு. நீ இன்னொரு பறவையின் பெயரைச் சொல்லு.
வாத்து தரையிலும் தண்ணீரிலும் வசிக்கும்.	வாத்தையும், அதன் படத்தையும் காட்டி "வாத்து" என்ற சொல்லைப் பிள்ளைகளிடமிருந்து வருவிப்பேன். வாத்து எங்கு வசிக்கிறது? நீ எங்கு வசிக்கிறாய்? நீரில் வசிக்கும் பிராணிகளில் இரண்டைச் சொல்லு.
அதன் உடம்பில் நீர் ஒட்டாது.	நீ குளிக்கும்பொழுது உன்மீது நீர் ஒட்டிக்கொள்ளுகிறதா? நாம் ஒரு குருவியை (கிளியை) தண்ணீரில் போட்டால் அதன்மீது நீர் ஒட்டிக்கொள்ளுமா?

விஷயம்	முறை
அதன் விரல்களின் இடையில் மெல்லிய தோல் இருக்கிறது. அதற்கு சவ்வு என்று பெயர். அத்தோலின் உதவியால் வாத்து நீரில் சுலபமாய் நீந்தும்.	வாத்தின் பாதத்தை உற்றுப்பார். அதன் விரல்களுக்கு இடையில் என்ன இருக்கிறது? இம்மாதிரி விரல்களுக்கு இடையில் சவ்வு இருக்கும் வேறு ஒரு பறவையைச் சொல். உனக்கு நீந்தத் தெரியுமா? நீ நீந்துவதற்கு எந்த அவயவங்களை உபயோகப்படுத்துகிறாய்?

அப்பியாசம் 1. படங்களின் பெயர்களைச் சொல்லுக :—
[சேவல், வாத்து, கிளி, மயில், காகம் இவற்றின் படங்களைப் பிள்ளைகளுக்குக் காட்டி, அவற்றின் பெயரை வருவித்தல்.]

2. பின்வரும் சொற்களைக் குறிக்கும் படங்களைக் காட்டுக :—
சேவல், வாத்து, கிளி, மயில். [படங்களையும், அவைகளுக்கு ஏற்ற சொற்களையும் (பெயர்களையும்) பொருத்திவைக்கச் சொல்லலாம்.]

3. விட்ட எழுத்துக்களையும் சொற்களையும் எழுதுக :—

I. அ——காலை——ல் கூ——ம் உயர—— சே——ல் ——த்து தண்——ர் வ——க்கும் ஒட்டா—— நீ——தும்.

II. அ. கோழி அதிகாலையில்——
ஆ. ——கோழிக்குச் சேவல்——பெயர்.
இ. வாத்து தரையிலும்——வசிக்கும்.
ஈ. அத்தோலின் உதவியால்——நீரில் சுலபமாய்——.

4. இந்த எழுத்துக்களை வார்த்தைகளாக அமைக்க :—
உ-ம். சேல்வ=சேவல். வும்கூ; உரம்ய; பக்காதுற; த்துவா; ண்ணீதர்; வ்வச.

5. பின்வரும் சொற்களைத் தக்கபடி மாற்றி வாக்கியமாக எழுதுக :—
உ-ம். கூவும் அதிகாலையில் சேவல்=சேவல் அதிகாலையில் கூவும்.
(a) பறக்காது உயரம் அதிக கோழி.
(b) பெயர் என்று ஆண் சேவல் கோழிக்குச்.
(c) தண்ணீரிலும் வாத்து வசிக்கும் தரையிலும்.
(d) ஒட்டாது நீர் உடம்பில் அதன்.

கைத்தொழில் :—களிமண்ணால் சேவல், வாத்து, உருவம் செய்தல்.

சித்திரம் :—சேவல், வாத்து இவற்றின் படம் வரைதல்.

உடற்பயிற்சி :—கோழி பற பற, குயில் பற பற, வாத்து பற பற, யானை பற பற (பறவைகளின் பெயரைச் சொன்னால்தான், பிள்ளைகள் "பற பற" என்று சொல்லி கையை ஆட்டவேண்டும்.)

திருப்பிப்பார்த்தல் :—1. எதற்குச் சேவல் என்று பெயர்?
2. வாத்து எங்கே வசிக்கும்?
3. சவ்வு என்பது என்ன?

சிறு கதை

முயலுக்குக் கொம்பு உண்டா?

V. Vedam, E. 2 B. 389.

ஒரு நாள் காலை மிருகேந்திரனுகிய சிங்கம் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு மாடு தன் கொம்புகளால் அதைக் குத்தி விட்டது. உடனே மிருக ராஜனுக்குப் பெரிய கோபம் வந்து விட்டது. கோபம் என்ருல் சாமான்யமான கோபமல்ல. சிங்கராஜா உடனே "இந்தக் காட்டில் இனிமேல் கொம்பிருக்கும் பிராணி எதுவும் தலை காட்டக் கூடாது!" என்று உத்தரவு போட்டு விட்டது.

ஆகவே மான்களெல்லாம் வெளியே ஓடின. ஆடுகளெல்லாம் ஓடின. மாடுகள் கன்றுகுட்டிகள் எல்லாம் ஓடின. சிறிது கொம்பிருந்த மிருகங்கள் கூட வெளியே ஓடின. ஏனென்ருல் சிங்கந்தான் ராஜா: ராஜா சொற்படி பிரஜைகளெல்லாம் கேட்கவேண்டாமோ?

காட்டிலே இருந்த முயல் போய்க்கொண்டே இருக்கும்போது, ஒரு குளத்தில் தண்ணீர் குடிக்க இறங்கியது. நிழலில் தன் காதுகளைக் கண்டதும் அதற்குத் தூக்கி வாரிப் போட்டது. தன்னுடைய நீண்ட காதுகளை பார்த்து கொம்புகளோவென்று பயந்துவிட்டது. உடனே பிடித்தது ஓட்டம். ஓடும்போது டபக், டபக், டபக்கென்று அதன் மார்பு அடித்துக் கொண்டது.

இப்படி அது ஓடிக்கொண்டிருக்கும்போது, வழியில் ஒரு சுண்டெலி ஒரு கொய்யாப் பழத்தைக் கடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது; "ஐயா, ஐயா முயலாரே! எங்கே இவ்வளவு வேகமாக ஓடுகிறீர்?" என்று கேட்டது.

முயல் சற்று நின்று "ஓஹோ! உமக்குச் சமாச்சாரம் தெரியாது போல் இருக்கிறது. ராஜாதி ராஜனின் உத்தரவு காதில் படவில்லையா? கொம்புள்ள பிராணிகளெல்லாம் காட்டை விட்டுப் போக வேண்டுமே" என்றது.

சரிதான் முயலாரே! அதெல்லாம் எனக்குத் தெரியும் நீர் என் ஓட வேண்டும். உமக்குத்தான் கொம்பு இல்லையே.

இல்லை இருந்தாலும் யாராவது என் காதை கொம்பென்று நினைத்துக் கொண்டு போய் சிங்கத்தினிடம் சொல்லிவிட்டால் அப்புறம் என் கதி?

சுண்டெலி இடுப்பில் கையை வைத்துக்கொண்டு விழுந்து விழுந்து சிரித்தது. முயலாரே நீர் சுத்த மடையராயிருக்கிறீரே! உம்முடைய காதைப் பார்த்து யாராவது கொம்பென்று நினைத்துக்கொள்ளுவார்களா? என்று அது சொல்லிக்கொண்டிருக்கும்போதே முயல் அவ்விடத்திலிருந்து ஒரே பாய்ச்சலாய் கிளம்பி ஓட ஆரம்பித்து விட்டது.

முயல் காட்டைவிட்டு வெளியே ஓடிப் போயிருக்கவேண்டியது தான். ஆனல் அப்போதுதான் ஒரு பறவை கூடு கட்டுவதற்கு சுள்ளி

பொறுக்க அங்கே வந்தது. முயல் வேர்க்க விறுவிறுக்க ஓடி வருவதைக் கண்டு, "என்ன! என் இவ்வளவு வேகம்? நான் பயந்தல்லவோ போய் விட்டேன்! வீட்டில் உம் மனைவிக்கு எதாவது உடம்பு அசௌகரியமா. நேற்றுத்தானே அவள் குட்டிபோட்டாள்" என்று கவலையுடன் கேட்டது!

முயல் சிங்கத்தின் உத்தரவையும், தன் காதுகளை யாராவது கொம்பென்று சந்தேகப் படுவார்களோ என்று தான் ஓடி வருவதையும் சொல்லிற்று.

பறவை சிரிசிரி என்று சிரித்துவிட்டு "பைத்தியகார முயலாரே! சுத்த பயங்கொள்ளியாயிருக்கிறீரே! யாராவது போய் சொன்னால் தான் என்ன? உங்கள் ராஜாவுக்குக் காதுக்கும் கொம்புக்கும் வித்தியாசம் தெரியாதா? மேலும் ராஜா எதோ கோபத்தில் சொல்லியிருக்கிறார். இத்தனை நேரம் தம் உத்தரவை மறந்துகூடப் போயிருப்பாரே! அனாவசியமாய் நீர் என் பயப்படுகிறீர்? வீட்டிற்குப் போம். உம் மனைவி உமக்காகச் சாப்பிடாமல் காத்துக்கொண்டிருக்கிறாள்" என்று சொல்லிற்று.

முயலுக்குப் பறவை சொன்னது சரிதானென்று பட்டது. காதைத் தொங்கப் போட்டுக்கொண்டு தன் வீட்டை நோக்கிப் போயிற்று.

அது முதற்கொண்டு எதாவது இல்லாத விஷயத்தைப்பற்றி எளனமாகச் சொல்லவேண்டுமானால் 'முயற்கொம்பு' என்று சொல்லுவது வழக்கமாக இருந்து வருகிறது.

விடுகதை விடைகள்

[கொத்து 37, மலர் 1 பக்கம் 8-ன் விடுகதைகள்]

விடைகள் (1) கோழி (2) தாமரை (3) எள்; செக்கு; பிண்ணாக்கு; எண்ணெய். (4) மயில் (5) விளக்கமாறு (அல்லது) துடப்பம்.

விடுகதைகள்: இது என்ன?

1. அடுக்கடுக்காய்ப் பட்டுடுத்தி அமர்ந்திருப்பாள் அங்காடிக்கடையில். (P. Ramachandran)

2. மூவர்ணக் கிளிகள் ஒரு கூண்டிற்குள் சென்றால் ஒரே வர்ணம். (A. Ganapathi)

3. மாடு இரண்டு, கால் நான்கு, கண் உண்டு, பாலுமில்லை, வாலுமில்லை. (P. Ramachandran)

4. ஓட்டினால் வீடு கட்டி, உள்ளே புரிசுற்றி, நாட்டாருக்கு நல்ல உணவாகும். (V. Gurusamy)

ஹிந்துஸ்தானி பாஷையின் அவசியம்

D. Rajan

நமது நாட்டில் எங்கு பார்த்தாலும் ஹிந்துஸ்தானி பிரசாரம் மிகத் தீவிரமாக நடந்து வருகிறது. காரணம் அது இந்தியாவில் பெரும்பாலோ ரால் பேசப்படும் மொழியே.

நமது நாட்டில் அநேக மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இருந்த போதிலும் நமது நாட்டிற்கு ஒரு பொது மொழி தேவை. அந்தக்குறையை நிவர்த்தி செய்ய ஹிந்துஸ்தானி ஒன்றினால்தான் முடியும். இதை அநேகர் ஹிந்தி எழுத்தாலும், உருது எழுத்தாலும் எழுதுகிறார்கள். ஹிந்திப் பாஷையில் சமஸ்கிருத சொற்கள் மிகுந்தவை. உருதுவில் பார்ஸி, அரபி சொற்கள் மிகுந்தவை. ஆகவே இந்த இரண்டு மொழிகளும் கலந்த ஒரு மொழிதான் ஹிந்துஸ்தானி.

வங்காளத்திலும், குஜராத்திலும் மற்றும் அநேக வட நாட்டினர் களும்தங்களது தாய்மொழியைத் தவிர ஹிந்துஸ்தானியையும் கற்றுக் கொள்ளுகிறார்கள். ஆங்கில மொழியை உலக மொழியாக ஒத்துக்கொண் டாலும் அது இந்தியாவில் அனுபவசாத்தியமற்றது. முதலில் தாய் மொழியை நன்கு பயின்று ஆங்கிலத்தையும் ஹிந்துஸ்தானியையும் கற்றுக் கொள்வது நலம்.

மொகலாயர் ஆட்சி செய்த காலத்தில் இந்தியாவில் பாரஸீக மொழி அரசாங்க பாஷையாக விளங்கியது. அக்காலத்தில் ஹிந்துக்களும், கிறீஸ் தவர்களும் அந்த மொழியைக் கற்று உத்தியோகத்தில் அமர்ந்து இருந்தார் கள். அந்தக் காலத்தில் விரஜ்பாஷா என்ற ஒரு பாஷை பேசப்பட்டு வந் தது. சிறிது சிறிதாக பாரஸீக அரபி சொற்களும் ஹிந்தியும் அதில் கலந்து ஒரு கலப்பு மொழியாக மாறியது. ஷாஜஹான் காலத்தில் அந்த கலப்பு பாஷை "உருது" என்ற பெயரில் அழைக்கப்பட்டது.

"உருது" என்றால் ராணுவக் கூடார பாஷை என்று அர்த்தம். அந்த காலத்தில் பலதேசத்து சிப்பாய்கள் தங்களுடைய கருத்துக்களை இந்த மொழியின் மூலமாகவே வெளியிட்டு வந்தார்கள். தற்சமயம் ஹிந்தி என்றும், உருது என்றும் இந்த ஹிந்துஸ்தானியைக் குறிப்பிடுகிறார்கள். இப்பொழுது சமீபத்தில் நடந்த யுத்தம் காரணமாக அநேகர் ஹிந்துஸ் தானி கற்றுக்கொண்டார்கள். பட்டாளத்தில் உள்ள பெரிய உத்தியோ கஸ்தர் முதல், ஒரு சாதாரண சிப்பாய் வரையில் இந்த பாஷை பரவியிருக் கிறது. ராணுவத்தில் இந்த பாஷையை ஆங்கில எழுத்துக்கள் மூலம் கற்பித்தார்கள். இதில் அநேக ஆங்கில ஆபிஸர்களும் இந்திய ஆபிஸர் களும் சில பரிக்ஷைகளில் கூட தேறியிருக்கிறார்கள். ராணுவத்தில் இந்த பாஷை கட்டாய முறையில் கற்பிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பல பாஷைகள் பேசப்பட்டு வருவதால் வடநாட்டார் இதில் எதைக் கற்பது என்ற சந்தேகம் தோன்றுவது இயல்பு. ஆனல் வடநாட்டில் பல பாஷைகள் பேசப்பட்டு வந்தாலும் அவர்கள் எல்லோரும் ஹிந்துஸ்தானியைக் நன்கு அறிகிருர்கள்.

இந்தியா சுதந்திரம் அடையும் நாள் வெகு தூரத்தில் இல்லே. யார் என்ன செய்த போதிலும் இந்தியா சுதந்திரம் அடைவது நிச்சயம். சுதந்திர இந்தியாவில் பொதுவாக ஒரு பாஷை விளங்குமாஞல் அந்த ஸ்தானத்தை ஹிந்துஸ்தானிதான் அடையும். அது ஜாதி, மத பேதமின்றி எல்லா மக்களாலும் பேசப்படும் மொழி. அதனுல்தான் இந்திய தேசிய காங்கிரஸ் ஹிந்துஸ்தானி பாஷையை அங்கீகரித்தது. இந்த நோக்கத்துடன்தான் காந்திஜீ எல்லோரையும் ஹிந்துஸ்தானி கற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிருர்.

"தக்ஷிண பாரத ஹிந்துஸ்தானி பிரசார சபை", 15, 20 வருஷ காலமாக தமிழ் நாட்டில் இந்த பிரசாரத்தை தீவிரமாக நடத்தி வருகிறது. ஆகவே எவ்வளவு சீக்கிரம் நாம் இந்த பாஷையைக் கற்றுக்கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கற்றுக்கொள்ளவேண்டியது நமது கடமை. தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழன் எதையுமே சுலபமாகக் கற்றுக்கொண்டு விடுவான். உதாரணமாக தமிழ் நாட்டிலும் வட நாட்டிலும் உள்ள கலாசாலைகளில், ஆங்கிலம் கற்போரின் திறமையைக் காணவேண்டுமானல் அதில் தமிழன்தான் முன்னணியில் நிற்கிருன். தமிழன் முயற்சி செய்தால் வட நாட்டாரைவிட நல்ல ஹிந்துஸ்தானி கற்றுக்கொள்ள முடியும். ஆகவே எல்லோரும் ஹிந்துஸ்தானி கற்றுக்கொண்டால் நமது நாட்டின் பண்பிற்கு தகுந்த முறையில் நமது பொதுப் பாஷையை சிருஷ்டி செய்யலாம். நமது நாடு ஹிந்துஸ்தான். ஆகவே நமது பொது மொழி ஹிந்துஸ்தானியாகும். காந்திஜீ தாய் மொழியின் மூலம் இந்த பாஷையைக் கற்றுக்கொண்டால் வெகு சீக்கிரத்தில் சுலபமாக கற்றுக்கொள்ளலாம் என்ற முடிவிற்கு வந்திருக்கிருர். ஆகவே நாம் ஹிந்துஸ்தானி கற்றுக்கொள்ள முயற்சி செய்வோமாக. எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நமது முயற்சி வெற்றிபெறுவதாக.

WANTED a Secondary Grade Teacher. Pay Rs. 24 per mensem and the Dearness Allowance of Rs. 16. For Devipatanam R. C. School, Sundaranachiapuram Parish.

Apply to the Parish Priest,
Catholic Mission,
Sundaranachiapuram, (Via) Rajapalayam,
RAMNAD DT.

இயற்கையின் இனவிருத்தி !

[N. Bedhu.]

இயற்கையே, உலகின் அழகு என்பது. இப்புவனத்தில் இயற்கையை வெல்ல எதனாலும் முடியாது. இயற்கைதான், இயற்கையை முறியடிக்கக் கூடும்.

அழகிய ஓர் ரோஜாமலரின் வடிவத்தையும், இதழ்களின் அடுக்குகளையும், நிறத்தையும் காணும்பொழுதும், மணத்தை நுகரும்பொழுதும், இயற்கையின் மாண்பை நமது இதயத்தில் நிரப்பி விட்டு, இதை படைத்தவர் யார்? என்ற வினாவையும் மனம் வினாவுகின்றது. இயற்கையை சிருஷ்டித்தவர் சர்வக்ஞரான கடவுளேயாவர். இறைவன் படைத்த இயற்கையின் அழகே அழகு! இயற்கையின் மாண்பே மாண்பு!! இயற்கையின் நிறமே நிறம் !!!

இவ்வித அம்சங்களைக்கொண்ட இவ்வியற்கை 'இனவிருத்தி செய்தல்' விசித்திரத்திலும் விசித்திரமே! இயற்கை, இயற்கையைக்கொண்டே இனவிர்த்தி செய்கின்றது.

காற்று, மழைநீர், சிலபிராணிகள், பறவைகள் முதலியவைகளின் மூலமே விருத்தியடைகின்றன. அவை எப்படியென ஈங்கு நோக்குவோம்.

(1) a. **காற்றின் மூலம் :**—எருக்கு, பருத்தி, இளவம்பஞ்சு முதலியவைகளின் காய்கள், பருத்துமுற்றினவுடன் வெடிக்கின்றன. இவைகளினுள் இருக்கும் விதைகளின்மேல் மிகவும் மெல்லிய நூல் இழை போன்ற வஸ்து ஒட்டிக்கொண்டிருக்கிறது. இயற்கைக்காற்று வீசும் விரைவிலே, இவ்விதைகளையும் தம்முடன் இழுத்துச் செல்கின்றன. எவ்விடத்திலாவது காற்று சிறிது மந்தமாக வீசினாலும், ஏதாவது முட்செடிகள் தடுத்தாலும், அவ்விடத்திலே விழுந்து, மழை பெய்தவுடன் நன்றாக செழித்து வளர்கின்றன. இவ்விதைகள், காய்கள் வெடித்து காற்றின் மூலம் பரவுவனவாகும்.

b. வெண்டையும், கொத்தவரையும், கொட்டைமுத்தும் வெடித்துதான் பரவுகின்றன. ஆனால் இவை காற்றோடு செல்வதில்லை. முற்றின நெற்றுகள் வெடித்தவுடன் பல திசைகளிலும் சிதறி விழுந்து, மழை பெய்தவுடன் முளைக்கின்றன.

(2) **மழைநீர் :**— மழைநீரின் வழியே பல விதைகள் ஓடி, மூலை முடுக்குகளில் தேங்கி அவ்விடத்திலேயே வேரூன்றி தழைக்கின்றன. உதாரணமாக கடற்கரை ஓரங்களிலே உள்ள தென்னைமரங்களிலிருந்து பல முற்றின தேங்காய்கள் நீரில் விழுகின்றன. இவை கடல் அலைகளால் தள்ளப்பட்டு கரைகளில் மோதுண்டு, அவ்விடத்திலேயே வேர்விட்டு முளைக்கின்றன.

(3) **பிராணிகளின் மூலம் :—** முக்கியமாக நாயுருவி என்னும் காயானது, தனது மேலுள்ள முட்களால் பன்றியின்மேல் ஒட்டிக்கொண்டு போய், பன்றிகள் எவ்விடம் தனது உடலைத் தேய்த்துக்கொள்ளுகின்றனவோ அவ்விடத்திலே இவை விழுந்து முளைக்கின்றன.

நாய்கள் கால்நடைகள், வயல் எலிகள் முதலியவைகளின் மேல் நெறிஞ்சி முட்கள் ஒட்டிக்கொண்டுபோய் பல இடங்களில் விழுந்து முளைக்கின்றன.

புன்செய் நிலங்களிலே கால்நடைகளுக்காக பலவித புல் முளைத்திருக்கும். அவ்விடம் ஆடுமாடுகளை மேய்ப்பவர் அமர்ந்திருப்பதுண்டு. அன்னாரின் வேஷ்டிகளிலும், துண்டுகளிலும் பலவித சிறு விதைகளும், சொனைகளும் ஒட்டிக்கொண்டிருக்கும். அவைகளை அவர் எவ்விடம் உதறுகின்றாரோ அவ்விடம் அவை முளைக்கின்றன.

(4) **பறவையின் மூலம் :—** வேப்பம் பழத்தைக் காகம் அப்படியே விழுங்குகின்றது. காகங்களுக்கு இவ்வேப்பம் பழங்களின் விதைகளை, அதன் உடலில் உள்ள மெல்லிய ஜீரணக்கருவிகள் ஜீரணிப்பதில்லை. ஆதலால் அவை எங்கு எச்சமிடுகின்றனவோ அவ்விடங்களிலே வேப்பஞ் செடிகள் வளர்ந்து வருகின்றன.

(5) **நடுதல் :—** அவரை, பீர்க்கு, புடல், வெங்காயம் முதலியவைகளை ஜனங்கள் தங்கள் கைகளாற் நடுகின்றனர்.

(6) **தெளித்தல் :—** தண்டுக்கீரை, புளிச்சை, சோளம், கம்பு, சில வகை பயறு (நரிப்பயறு, பாசிப்பயறு) முதவியவைகளை விவசாயிகள், நிலத்தை திறம்பட உழுது, தன் கைகளாற் தெளித்து பயிராக்குகின்றனர்.

(7) **போத்துகள் :—** பல இடங்களிலே வாத நாராயணமரம், பூவரசு, முருங்கை முதலிய மரங்களின், ஒழுங்காகவும், நேராகவும் உள்ள போத்துகளை (கிளைகளை) கொண்டுவந்து, அவைகளின் நுனியில் சிறிது சாணியைத்தடவி, பூமியில் நட்டு விருத்தி செய்கின்றனர்.

(8) **பதியம் :—** அரளி, ரோஜா, கிளுவை முதலியவைகளின் குச்சிகளை வெட்டிவந்து, குச்சிகளை வளைத்து இரு நுனிகளையும் பூமியில் நட்டு பயிராக்குகின்றனர்.

(9) **கொடிகள் :—** சர்க்கரைவள்ளிக் கிழங்குகளின் கொடிகளை, இரு சாண்கள் நீளமுள்ள கொடிகளாக அறுத்து, பூமியில் நட்டு வைத்தால் நன்ருக செழித்து வளர்ந்து வருகின்றன.

இவ்விதமாக இயற்கைத் தாவரங்கள் இன விருத்தியடைந்து கொண்டு வருகின்றன. இயற்கையைப் படைத்த இறைவனை நாம் என்றும் ஸ்தோத்தரிப்போமாக !

வீரதேவன் (சரித்திரம்)

சிறு நடிப்பு

[A. Kathirvelu, H. M. Kiladamur]

காக்ஷி 1

இடம்: குணசேகரபாண்டியனின் அரண்மனை முற்றம்.

பாத்திரங்கள்: மந்திரி, பிரதானி, குடிமக்கள்.

அரசன்: (மாடியின் முற்றத்தில் நின்றுகொண்டு குடிமக்களைப் பார்த்து): "என் உயிர்நாடியைப் போன்ற குடிமக்களே, உங்களின் க்ஷேமத்தை நாடுவது அரசனின் கடமையல்லவா? ஆதலின் என் மூத்த குமாரன் சுந்திரபாண்டியன் மதியீனன், ஸ்த்ரீலோலன்; ஒரு சமயம் தந்தையாகிய என் கழுத்திற்கே கத்திநீட்ட சதி செய்தான். அவன் உங்களுக்கு அரசனாக நேர்ந்தால் கேட்கவேண்டுமோ அவன் கொடுங்கோலை? ஆகையால் அறிவில் சிறந்தவனும் வீரத்தில் மிகுந்தவனுமாகிய என் இளைய குமாரன் வீரபாண்டியனுக்கு முடிசூட்ட எண்ணியுள்ளேன். குடிகளாகிய உங்கள் நினைவு யாது?"

குடிமக்கள்: (ஒன்று சேர்ந்து) அதுவே எங்கள் அபிப்பிராயம். இளவரசர் வீரபாண்டியனுக்கு ஜே!

காக்ஷி 2

பாத்திரங்கள்: சுந்திரபாண்டியன், சதிகார கூர்மன் காவர்காரன்.

சுந்திரபாண்டியன்: (கத்தியைக் கூர்செய்துகொண்டு வஞ்சக சிரிப்புடன்(ஹ! ஹா! என் தம்பி வீரபாண்டியன் வீரசுவர்க்கம் புக வழிகாட்டும் கத்தியிது. (ஆள் வரும் சப்தம் கேட்டு திரும்பி பார்த்து) யாரங்கே!

காவற்காரன்: இளவரசே தங்கள் நண்பர் கூர்மர் வந்திருக்கிறார்.

சுந்தரபாண்டியன்: சரி இங்கு யாருமில்லை; வரச்சொல். (கூர்மன் வருகிறான். அவனைப் பார்த்து) வாரும் வாரும் வாரும் கூர்மரே! ஏது இரண்டு மூன்று நாட்களாக இப்பக்கம் வரவேயில்லையே. ஒருக்கால்......

கூர்மன்: சே சே! அப்படி ஒன்றும் நினைத்துவிடாதீர்கள். இந்த நாய் தங்களைத் தவிர வேறே ஒருவரையும் சுற்றாது.

சுந்தரபாண்டியன்: அதைத்தானே நான் விரும்புவது. (சற்று யோசித்து) கூர்மரே நேற்று குடிமக்கள் கூறியதைக் கேட்டீரா?

கூர்மன்: ஆமாம் அதைப்பற்றித்தான் தங்களிடம் கூறலாமென்று வந்தேன். அது தங்களுக்குப் பிடிக்குமோ என்னமோ என்றுதான்......

சுந்தரபாண்டியன்: கூர்மனின் தோளைத் தட்டி எதுவாயிருந்தாலும் சரி தயங்கவேண்டாம் எல்லாம் என் நலத்திற்குத்தானே?

கூர்மன் : எல்லாம் உங்களுக்காகத்தான் (எழுந்து சுற்றும் முற்றும் பார்த்து காதில் ரகசியமாகச் சொல்லுதல்)

சுந்தரபாண்டின் : சபாஷ் கூர்மரே ! சமயத்திற்கேற்ற உபாயம் கூறினீர் ; உம்மைச் சஞ்சீவியென்றே கூறலாம். இன்றே என் சகோதரன் ஒழிந்தான். (ஒரு ஆரத்தைக் கழற்றிக்கொடுத்து) இதோ இதை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கூர்மன் : (ஆரத்தைப் பெற்றுக்கொண்டு) மறந்துவிடாதீர்கள் ; எல்லாம் நினைவிலிருக்கட்டும். நான் வருகிறேன். (போகிறான்.)

காக்ஷி 3

இடம் : நந்தவனம், நேரம் : மாலை.

பாத்திரங்கள் : வீரபாண்டியன், சுந்தரபாண்டியன்.

சுந்தரபாண்டியன் : (இருவரும் நந்தவனத்தில் உலாவிக்கொண்டு) தம்பீ நீ முடிபுனைந்து அரசாளுவதைப்பற்றி எனக்கொரு வருத்தமுமில்லை. நீ யாண்டால் என்ன, நானாண்டாலென்ன. ஆனால் நம் தந்தையைப்போல் குடிமக்களிடம் அன்பாக இருக்கவேண்டும்.

வீரபாண்டியன் : அண்ணா தங்கள் உதவியிருந்தால் அம்மாதிரியே ஆளுகிறேன். (பேசிக்கொண்டே பளிங்கு மேடைக்கருகில் வருகின்றார்கள். உடனே சுந்தரபாண்டியன் வாளை உருவிக்கொண்டு)

சுந்தரபாண்டியன் : அடே நானிருக்க நீயா அரசாளப்போகிறாய். இதோ வானுலகம் அனுப்புகிறேன். (கத்தியை ஓங்குதல். உடனே பதுங்கியிருந்த ஓர் ஆள் சுந்தரன் முதுகில் கட்டாரியால் குத்துதல். சுந்தரபாண்டியன் ஹா என்று மூர்ச்சித்து கீழே விழுதல்.)

வீரபாண்டியன் : (திடுக்கிட்டு தன்னருகில் அண்ணனை குத்திய ஆள் நெருங்குவதைப் பார்த்து) யாரது வீரதேவனா ?

வீரதேவன் : ஆம் பிரபு தங்கள் அடிமை.

வீரபாண்டியன் : இது எப்படி உனக்குத் தெரியும்.

வீரதேவன் : எல்லாம் மீனாக்ஷி சுந்தரரின் அருள்தான். (சுந்தரபாண்டியன் கையிலுள்ள வாளை வீரதேவன் எடுத்துக்கொண்டே) துரோகி, தன் தோளில் ஒன்று என்பதை அறியாத மடையன். (வீரபாண்டியனைப் பார்த்து) எஜமானே ! இந்த வஞ்சக நரியின் முகத்தில் இனி விழிக்க வேண்டாம். வாருங்கள் செல்வோம்.

வீரபாண்டியன் : வீரதேவன் முதுகில் தட்டி, இன்றுதான் நீ என் உயிர்த்தோழன்.

வீரதேவன் : (வீரப்பாண்டியனைப் பார்த்து.) இளவரசே ! இனி நான் இங்கிருந்தால் எனக்கு ஆபத்து நேரிடும் தலை மறைவாக இருந்து யாவற்றையும் கவனிக்கிறேன்.

வீரபா : (சுற்றுமுற்றும் பார்த்து) சரி சென்று விடு ; யாராகிலும் பார்க்கப் போகிறார்கள். (இருவரும் நந்தவனத்தை விட்டுப் போதல்).

காக்ஷி. 4

இடம்: சுந்தரபாண்டியனின் அந்தரங்க அறை.

பாத்திரங்கள்: கூர்மன்; சுந்தரபாண்டியன்.

சுந்தரபா: (ஆழ்ந்த யோசனை செய்து பெருமூச்சு விட்டுக்கொண்டு கூர்மனைப் பார்த்து) கூர்மரே! நாம் எவ்வளவுதான் சதி செய்தாலும் ஒன்றும் பலிக்கவில்லையே. (மறுபடியும் ஆழ்ந்த சிந்தனை செய்தல்)

கூர்மர்: (சுந்தரபாண்டியனைப் பார்த்து.) எல்லாவற்றிற்கும் காலம் வரவேண்டாமா, பிரபு.

சுந்தரபா: (சிந்தனையிலிருந்து ஒரு முடிவிற்கு வந்து தனக்குத் தானே) ஆம்! அதுதான் சரி. (கூர்மனைப் பார்த்து) கூர்மரே எனக்கொரு யோசனை தோன்றுகிறது. நீ உடனே விஜயநகரம் சென்று தெலுங்குப்படைகளை அழைத்துக்கொண்டுவா. அதற்குள் நான் இங்கு ஓர் கலகத்தை தூண்டி விடுகிறேன். நாம் இருவரும் சேர்ந்து என் தந்தையையும், தம்பியையும் ஒழித்துவிட்டால் பிறகு பட்டம் நம்முடையதுதான்.

கூர்மன்: ஆம் அதுதான் சரி; இதோ சென்று அழைத்து வருகிறேன். கலகத்தை வெகு துரிதமாக மூட்டிவிடுங்கள். (போகுதல்)

சுந்தரபாண்டியன்: (பல்லைக் கடித்துக்கொண்டு தனக்குள்ளே) நாளைப் பார்க்கிறேன் அந்த குடி மக்களின் அபிப்பிராயத்தையும் மகுடாபிஷேக விழாவையும்! (மஞ்சத்தில் அமர்தல்)

சுந்தரபாண்டியன் சதிப்படைகளுக்கும், வீரபாண்டியன் படைகளுக்கும் கடும்போர் நடக்கிறது. வீரபாண்டியன் படைகளின் கை மேலோங்குகிறது. சுந்தரபாண்டியன் தெலுங்குப் படைகள் வீராத்தைக் கண்டு இனி இங்கிருந்தால் தலை தப்பாதென்று ஒருவருக்கும் தெரியாமல் சண்டையை விட்டு ஓடி விடுகிறான். கலகம் அடக்கப்பட்டு வீரபாண்டியனுக்கு முடிசூட்டப்படுகிறது. அவரவர்கள் தங்கள் காணிக்கைகளைக் கொண்டு வந்து வணங்கிச் செல்லுகிறார்கள். அப்போது ஒருவன் முகமூடியுடன் தலையில் ஒரு கூடையை சுமந்து வருதல்)

முகமூடி: (அரசர் முன் கூடையை வைத்து, மகாராஜா நமஸ்காரம். (கத்தியை நீட்டி) இதோ என் காணிக்கை; இது அண்ணனுடைய வாள் நீதியுள்ள தம்பிக்கேயுரியது. (கூடையைக் காண்பித்து) இதோ இதில் துரோகி கூர்மன் தலை தங்களுக்கு எதிராக தெலுங்குப் படையை அழைத்துவரச் சென்ற இவனைத் துரத்தி இதே வாளால் ஒழித்தேன். இனி நமது நாடு தப்பியது. நான் இருக்கும் மட்டும் அன்னியரை இங்கு வரவிடேன். (முகமூடியை எடுத்தல்–அங்குள்ள யாவரும்ஆச்சரியப்படுதல்.)

வீரபாண்டியன்: (திகைத்து சிம்மாசனத்தை விட்டெழுந்துகொண்டே) ஹா வீரதேவன்!!! மறவர் குல சிங்கம், இனி, நீயே என் அமைச்சன். (அருகில் வந்து வீரதேவனைக் கட்டி தழுவுதல்.)

[திரை விழுதல்.]

இருண்ட இதயம்

[கோஹினூர்]

[இருண்ட இருதயத்தில் வெளியாகும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல!]

(கொத்து 37, மலர் 1, பக்கம் 13-ன் தொடர்ச்சி.)

9. வெறுத்த வாழ்க்கை

"அத்தான்! எது வேகமாக வருகிறீர்களே! என்னைப் பார்க்காவிட்டால் உங்களிதயமே இருண்டு விடுகிறதோ?"

"கண்ணே! அதற்குமா சந்தேகம்?......ஆனல்...நிரந்தரமாகவே... (பெருமூச்சு) பார்க்க முடியாதபடி விதி...இருக்கையில்..."

"...இம்...விளையாட்டு வேறேயோ (கண்ணைச் சிமிட்டிக்கொண்டு) என்னருமைத்தாயும்...உயிரைப்போல் நேசிக்கும் மாமாவும்......" இருக்கையில் எனக்கென்ன குறைவு?"

"ஆமாம்! ......சுடர்மணி!...ஆனல்......சுற்றத்தார்கள் யாவரும் தடுக்கும்போது அப்பாவும், அத்தையும் மாத்திரம் ஒன்றும் செய்ய முடியாதுதானே!"

"என் முடியாது? அப்படியின்றேல்......மரணத்தில் ஒன்றுபடலாம்! என்ன அத்தான் யோசனை? அவ்வளவு தூரம் உங்களுக்கு வர மனமில்லையே! அன்றைக்கு அப்பா வருவதற்குள் உங்கள் வீட்டு வரையிலும் வருகிறேன் என்று சொல்லிவிட்டு என்னுடன் அப்பாவை ஏமாற்றும் எண்ணத்துடன் வந்து......(கலகல என நகைத்துக்கொண்டே) இம்! அப்பாவே எங்கள் வீட்டிலிருக்க கடவுள் கிருபை செய்திருக்கையில்......"

"அன்பே! ஆமாம்...ஆனல் என் தந்தை முதவில் உன் தாயை மணக்க நினைத்திருந்திருக்கிருர்......அந்த நிலையில் விதி வசத்தால் பிரிந்து உருகி காலத்தை கழித்திருக்கிருர்கள்....(பெருமூச்சுடன்) இப்பொழுதோ என் தந்தை மனைவியை இழந்தும், உன் தாய் கணவனை இழந்தும் நிற்கிருர்கள்.....இருவருடைய பரிசுத்த பிரேமையும் இன்னும் மங்கவில்லை...ஆதலின்...கண்ணே!...சீ...சீ...மன்னித்துக்கொள்...சுடர்மணி ...நாமிருவரும் உன் தாய்க்கும், என் தந்தைக்கும் மணமுடித்து வைக்கலாம்......"

"அது சரி!...அந்நிலையில் நம் காதல்...?"

"நம் முன்னறி தெய்வங்களுக்கே அர்ப்பணம் செய்வது."

"உங்கள் நெஞ்சு உண்மையில் வைராக்கியமாகிவிட்டதா?......... ...அன்பே! அத்தான்!......!

“ கண்மணி !...என் பிரேம மணி...என் ஜீவமணி...நீயே என்னுயிர் ...நீயே என் உடல்...நீயே என் ஜீவன்...என் ஆத்துமாவும் நீயே...... ஆனால்...இருண்ட இதயத்திற்கு மின்னலும் வரண்ட மனத்திற்கு நீரூற்றும் இன்றி துயரப்படும் நன் முன்னறி தெய்வங்களின்...நொந்த இதயத்தைப் பார்க்க வேண்டாமா ?......என் தந்தை......(பெருமூச்சுடன்) காதலின் சக்திக்கு கட்டுப்பட்டு இத்தனை வருடமாக இருக்கையில்......கேவலம்......நான் என் தந்தையின் ஜீவ வாழ்க்கைக்கு வழி தேடவேண்டாமா ? கண்மணி ! நீயே சொல் ”......

இதுவரை மறைந்து கேட்டுக் கொண்டிருந்த நான் சட்டென்று “ வேண்டாம் ” என்று கூறிக்கொண்டே மெத்த வாசற்படியிலிருந்து உள்ளே நுழைந்தேன். எனக்கும் தெரியாது என் பின்னே நின்று கொண்டிருந்த ஜோதியும் பெருமூச்சுடன் என்னோடு நுழைந்தாள் ! எங்கள் திடும் பிரவேசத்தைக் கண்ட என்னிரு கண்மணிகளும் திடுக்கிட்டு எழுந்திருந்தனர் !

“ அப்பா ஹென்றி ! என் வாழ்க்கைக்கு இனி ஜீவன் ஏற்படப்போவதில்லை !......வீணாக உங்கள் வாழ்க்கையை இருளாக்கிக் கொள்ளவேண்டாம் !...உலகமே எதிர்க்கினும் நான் உங்களிருவருக்கும் மணம் செய்து வைக்கிறேன்...பயப்படவேண்டாம். சுடர்மணி ! உண்மையில் ஹென்றியை நீ விரும்புகிறாயல்லவா ? ”

“ மாமா !......இந்த கேள்விக்கு உங்கள் இதயமே பதில் சொல்லுமே ? ”

“ ஆமாம் ! சொல்லுகிறது. இந்த அகிலத்தைவிட அவனையே நேசிக்கிறாய் என்று ! அப்படித்தானே ? ”

“ போங்க மாமா ? ”

“ ஜோதி ! இந்த மனத்திற்கு கூடவா ஏதாவது ஒரு கடமையை சொல்லப் போகிறாய் ?.........எனிந்த மௌன புலம்பல் ? ”...

“ அப்பா ! நீங்கள்......... ”

“ நானா ? ......உயிரற்ற நானா ? ......உயிரோவியமான நானா ?...... ...நடை பிணமான நானா ? ......(பெருமூச்சு)

இதற்குள் எங்களைத் தேடிக்கொண்டு கீழே பேசிக்கொண்டிருந்த யாவரும் மெத்தைக்கு வந்து விட்டனர். அவர்களிடம் என் திட்டமான முடிவைக் கூறிவிட்டேன். என் வைராக்கியதனத்தை உணர்ந்த அண்ணனே அதற்குச் சம்மதித்து விட்டார். எல்லோரும் என் வீட்டிலேயே தங்கி விட்டார்கள். கலியாணத்திற்கு மும்முரமாக வேலைகள் நடந்து கொண்டிருந்தது ! கலியாண நாளும் வந்தே விட்டது !

*   *   *   *   *

என் வீட்டு மேல் மெத்தையில் ஈவிச்சேரில் உட்கார்ந்திருந்தேன். என் சட்டைப்பையில் இரு கடிதங்களிருந்தன! பிரஸவத்திற்கு பின் மகவைப் பார்த்து மகிழும் தாயைப்போல் தூரத்தில் மாலைகளுடன் வரும் மணத்தம்பதிகளைப் பார்த்தேன்! காரில் அகமகிழ-முகங்குளிர இளந்தம்பதிகள்-சுடர்மணியும் ஹென்றியும் வந்துகொண்டிருந்தனர். ஆனந்தக் கண்ணீருடன் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்த என்னை இதய ஆழத்திலிருந்து சர்ப்பம்போல சீறிவந்த ஒரு பலத்த பெருமூச்சு திடுக்கிடச் செய்தது! திரும்பி பார்த்தேன்! சிவந்த கண்களுடனும், கண்ணீருடனும் நின்றுகொண்டிருந்தாள் ஜோதி!

ஜோதியை நீர்மல்லிய கண்களுடன் நோக்கினேன்.

ஜோதி: தங்கள் இள இதயத்தால் எங்கள் குடும்பம் நல்ல நிலைமைக்கு வந்துவிட்டது. ஆனல்......உங்களை மணந்துகொண்ட அந்த புண்யவதி-பாக்கியவதி யாரோ?

நான்: பாக்கியவதி-புண்ணியவதி?......இந்த துர்ப்பாக்கியனை மணக்கும்படியாக பாவியான ஸ்திரி ஒருவருமில்லை!......(பெருமூச்சு) ஜோதி! தயவுசெய்து கெஞ்சி கேட்கிறேன்......உன் கால்களில் விழுந்து வணங்குகிறேன். வெந்த இதயத்தில் வேல் பாய்ச்சாதே! ......

ஜோதி: ஸ்வாமி!......வேண்டாம்!......நானு!......வேலா பாய்ச்சுகிறேன்!......

நான்: ஆமாம்!......(பெருமூச்சுடன்) நீதான்......வேலைத்தான்! அதைவிடக் கொடிய தீயை பாய்ச்சுகிருய்?......தயவுசெய்து கேட்டுக்கொள்ளுகிறேன்......இனி என்னை அடிக்கடி சந்திக்க வேண்டாம்!... போ! கீழே இறங்கிப் போ!......

ஜோதி: ஹா!......ஸாம்!......இறங்கிப் போ...என்னையா?...... நீங்களா சொல்லும் வார்த்தை இது? என்னைக் காண பிடிக்கவில்லையா? நான் உங்களையே நினைத்து உருகுகிறேன்!......உங்களுக்கு இறந்த மனைவி ஞாபகம் போகவில்லை போலும்......

நான்: சீ!......கடமை, கடமை என்று காதலனது உள்ளத்தைக் கண்டம் துண்டமாக வெட்டிய காரிகையே! உன்னைப்போல் அற்ப ஆசைக்கும், பாழும் பணத்திற்கும் கற்பை அர்ப்பணம் செய்யும்......

ஜோதி: (கோபமாக இடைமறுத்து)......நிறுத்துங்கள் ஸாம்! நிறுத்துங்கள்......ஆசைக்கும், பணத்திற்கும் கற்பை அர்ப்பணித்த காரிகை இங்கே இல்லை!

நான்: கோபம் மாத்திரம் வேகமாக வருகிறதே!......பணத்திற்கு கற்பை அர்ப்பணிக்காவிடில்......சுடர்மணி!

ஜோதி: நிறுத்துங்கள்!......நான் உங்கள் மேலுள்ள பிரேமையினுல் இவ்வளவு நேரம் பொறுமையாயிருந்தேன். நான்தான் பணத்திற்கு

கற்பை அர்ப்பணித்தேன்.....நீங்கள்.....மணம் செய்யாத மகானுபாவரோ! ......ஹென்றி ...... ஏன் இந்த மௌனம்?...... ஏனிந்த கண்ணீர்? ......ஸாம் மன்னித்துக்கொள்ளுங்கள்! பட பட என பேசிவிட்டேன்!

நான்: (சாவதானமாக கண்ணீர் வழிய) ஜோதி!......மன்னிப்பு ஏன் (அவளை விட்டு பிரிந்ததிலிருந்து காந்தாவின் மரணம் வரை சகலமும் கூறி) இன்னும் உன் மேலுள்ள காதலால் என்னிள வாழ்க்கையையே பாழ்படுத்திக் கொண்டேன் என அறிந்துகொள். இதோ ஹென்றி யார் என்னும் கேள்விக்கு விடையளிக்கும் கடிதம் என்று கூறிக்கொண்டே அனாதை ஆஸ்ரமத்தாரின் அத்தாட்சியைக் கொடுத்தேன். அதைக் கண்ணீருடன் வாசித்து விட்டு என்னை நோக்கினள்.

“ஹா! ஸாம்!! நான் பாவி!!!......மன்னித்துக் கொள்ளுங்கள். ஸாம்!...ஸாம்!!...அன்பா!.... .எனக்காகவா இந்த துயரம்?...... ஹென்றி அனாதை பையனா?......ஹா!......சுடர்மணிக்கு அனாதை மாப்பிள்ளையா?......குப்பைத் தொட்டி மாப்பிள்ளையா கிடைக்க வேண்டும்!”

“சீ!......நிறுத்து ஜோதி!! இதோ இந்தக் கடிதம் ஹென்றி யார் என்பதற்கு பதில் சொல்லும்” என ஜோதியின் குடிலைக் காலி செய்கையில் கிடைத்த கடிதத்தைக் கொடுத்தேன். ஜோதி ஆவலுடன் கடிதத்தை பிரித்து வாசித்தாள்.

ஜோஹூர்
8-9-1923.

அன்புள்ள தம்பி யோசேப்புக்கு:

உனக்கு இந்தக் கடிதம் வியப்பையும், திகிலையும் தரலாம். நான் இறந்துவிட்டேன் என யாவரும் எண்ணிக்கொண்டிருப்பீர்கள். ஆனல் உண்மையில் இன்றுதான்—இனி கொஞ்ச நேரத்தில் நான் இறந்துவிடுவேன். தம்பி!......இப்படி அழைக்கவும் அருகதையற்ற நான், என் சரீரத்தில் ஓடும் இரத்தம் உன் சரீரத்திலும் ஓடுகிறது என்னும் பாத்தியதையைக் கொண்டு இப்படி அழைக்கிறேன். என்னை அழைத்துக் கொண்டு ஓடிவந்த பாபி—அவன்தான் கோபிநாதன் என்னும் துர்மார்க்கன்—என்னை ஆசை காட்டி இங்கே அழைத்து வந்தான். பிறகு கேட்பானேன். நேற்று அழகான ஓர் ஆண் மகவு பிறந்தது. தம்பி!...ஆசையுடன் அம் மகவை எடுத்து பார்ப்பதற்கும் அருகதையில்லா பாவியானேன்... பிறந்தவுடனேயே அந்த கல்நெஞ்சன் அந்த குழந்தையை கார்ன்வாலிஸ் ரோட்டு மூலையிலுள்ள ஒரு குப்பைத் தொட்டியில் வீசி எறிந்துவிட்டு வந்தானும். அந்த அருமை செல்வத்தின் தலையின் இடப் பாகத்தில்கூட அப்படியே ½ அங்குலத்திற்கு அடிபட்டு விட்டதாம். தம்பி! ஆசையுடன் போய் பார்த்தேன் இன்று. யாரோ அனாதை ஆஸ்ரமத்தார் எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் என அறிந்து சிறிது மனச்சாந்தியுற்றேன். என் நிலைமை மகா கேவலமாகிவிட்டது. அவனும் என்னை வெறுத்து

விட்டு வேறொரு சிங்களப் பெண்ணோடு குலாவுகிறான். ஆதலால் இறக்கிறேன். என்னை மறந்து—மன்னித்து ஒரே ஒரு தடவையாக—எனக்காக கடைசி குளிப்பு குளித்துவிடு.

இப்படிக்கு
பரந்த உலகில் பாவத்தை சுமந்த
பாவி 'பிலோமினாள்.'

கடிதத்தை வாசித்ததும் கண்ணீருடன் என் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு சென்றாள் ஜோதி! நானும் பேசாமல் கீழே இறங்கினேன்!

இரண்டு நாள் சென்றது. கலியாணத்திற்கு வந்திருந்த யாவரும் சென்றனர். அன்று என் வாழ்க்கைக்கே முடிவைத் தேடுவது என முடிவு செய்துகொண்டு லால்குடி டாக்டரிடம் இரண்டு மூன்று முறை கேட்டு வாங்கின விஷ மருந்தை தண்ணீரில் கலக்கி மெத்தைக்கு எடுத்துக்கொண்டு சென்றேன். ஒருவரும் அங்கில்லை! 'கட கட' என அம் மருந்தைக் குடித்துவிட்டு ஒரு பாயில் படுத்துக்கொண்டேன். பாய்க்கு அடியில் "நான் தற்கொலை செய்துகொண்டேன்" என்னும் கடிதம் இருந்தது. (தொடரும்)

சங்கீதம்

(By B. Thomas Victor, Music Teacher.)

கடவுள் வணக்கம்

29 சங்கராபரணம்] [ஆதி தாளம்

ஸ ரி க ஸா ஸ மா க ரீ ,	ஸ ரி க ஸா ப	தா நி ஸா ,
பா.லர் நாங்கள் கூடினோம்	பக்தியுடன்	பாடினோம்
க ம ப க ம ப ப த ப மா ,	ரி க ம ரி க ம	ம ப ம கா ,
காலை இந்த வேளையில்	கருணை அருள்	தேவ னே

2. கல்வி ஞான முற்றிலும் காவலனே தானுமே
செல்வ சிறு பிள்ளைகள் உம்மை இன்று போற்றினோம்.
3. நல்லொழுக்கம் தூய நல்லறிவும் தானுமே
வல்லமை கொள் தேவனே வாஞ்சையுடன் போற்றினோம்
4. எங்கள் குரு நண்பர்கள் யாவரையும் காருமே
எங்கள் தந்தை தாயுடல் நற்சுகமே தாருமே
5. நேச ஞான மேய்ப்பராம் பாப்பு என்று வாழியே
மாசணுகா தேவனே மாட்சி யுயர் சீலனே.

கணிதப் பகுதி

Part II

M. Kulandaisamy H. M. Palayam, A. E. School

(கொத்து 37, மலர் 1, பக்கம் 8-ன் தொடர்ச்சி)

கழித்தல்களில் விரைவும் திருத்தமும் ஏற்பட அனுசரிக்கவேண்டிய விதிகள் :—

1. மூலாதாரக் கழித்தல் சேர்க்கை (100) களில் அதிகப்படியான அறிவை ஏற்படுத்த வேண்டும். இதற்குச் சாதாரணமாக, கட்டுக்குச்சிகள் தான் ஏற்றது. இன்னும் நெருப்புப் பெட்டி சீட்டுகளும், சோதனை அட்டைகளும் உபயோகித்தல் அவசியமாகும்.

2. கழித்தல் போதனையில் ஆரம்பத்தில் சுலபமான கழித்தல்களைக் கற்பிப்பது முதல் படியாகும்.

உ-ம்: நூ. ப. ஒ.

```
7 5 9
2 3 4
------
5 2 5   வித்தியாசம்
------
```

இது சுலபமானது. எனெனில் இதில் 10-க்கு கீழ்ப்பட்ட மூலா தாரக்கழித்தல் சேர்க்கைகள் மாத்திரம் உபயோகப்பட்டுள்ளது.

முதல் ஸ்தானத்தில் ஒன்றுகள்	$9-4=5$
10-வது ஸ்தானத்தில்	$5-3=2$
100-வது ஸ்தானத்தில்	$7-2=5$

இந்தக் கணக்கைச் செய்யும்போது பிள்ளைகள் கவனிக்கவேண்டியது ஸ்தானம் மதிப்பு ஒன்றே. அதற்கு உதவியாக மேலே கண்டபடி எண்களை சாரத்துக்குள் அமைத்துவிடுவது நல்ல வழியாகும். கஷ்டமான கழித்தலை செய்வதற்கு உதவியாக கீழ்க்கண்டுள்ளபடி 3 முறைகளை அனுசரிக்கவேண்டும்.

I. பிரித்துக் கழித்தல்: (1) இதற்கு அஸ்திவாரமாக 1 முதல் 10-வரையிலுள்ள எண்களில் ஒவ்வொரு எண்ணிலிருந்து பிரித்து எடுக்கத் தெரிந்திருக்கவேண்டும்.

(2) ஸ்தான மதிப்பு அதாவது ஒரு லக்கத்தை அதற்கடுத்த கீழின ஸ்தான மதிப்பிற்கு கொண்டுவரத் தெரிதல். 100-வது ஸ்தானத்திலிருந்து 10-வது ஸ்தானத்திற்கும் ஒன்ருவது ஸ்தானத்திற்கும் கொண்டு வருவதில் பயிற்சி ஏற்பட்டிருக்கவேண்டும்.

உதாரணம்.

752 = 7 நூறு 5 பத்து 2 ஒன்று
386 = 3 நூறு 8 பத்து 6 ஒன்று

366

நூ.	ப.	ஒ.
6 ~~7~~	4 ~~5~~ + 10	2 + 10
3	8	6
3	6	6

II. சம எண்களை கூட்டிக் கழிக்கும் முறை :

இம்முறையில் ஒரு முக்கிய விதி பிரயோஜனப்படுகிறது. அதாவது கழிக்கும் கழிக்கப்படும் எண்களுடன் சம எண்களைக் கூட்டினுல் அவற்றின் வித்தியாசம் மாருது என்பது இதை பிள்ளைகள் சார்ந்த கழித்தல்களில் பயிற்சிபெறும்போது கற்றுக்கொடுக்கவேண்டும்.

உ-ம்.

604 + 110 = 714
342 + 110 = 452

262   262

... காப்பக ...
2/10004

இதன் நன்மைகள் :- கழிக்கும் எண்ணில் (ஸ்தானம்) 0 வருவதால் வந்த கஷ்டத்தை (பிரித்து கழித்தல் முறையில் வந்த கஷ்டத்தை) இதன் மூலம் வெகு சுலபமாக கழிக்கமுடியும்.

III. குறைவான எண்ணைக் கூட்டிக் கழிக்கும் முறை :

இம்முறை பெரிய பிள்ளைகளுக்கு (4, 5 வகுப்பு) ஏற்றது. ஏனெனில் கழிக்கப்படும் எண்ணேடு (ஒவ்வொரு இனத்திலும்) எந்த சிறிய எண்ணைச் சேர்த்தால் கழிக்கும் எண்வரும் என்பதை கண்டுபிடிக்கமுடியும். வியாபார சம்பந்தமாக இம்முறை அதிகம் பயன்படும்.

உ-ம்.

ரூ.	அ.	பை.		ரூ.	அ.	பை.		ரூ.	அ.	பை.
20	0	0		20	2	4		20	0	4
15	10	8		15	10	8		15	10	8
4	5	4		4	7	4		4	5	8

(தொடரும்)

பெண் கல்வி (பாட்டு)

" எல்லாரும் போனுற்போலே நானும் போனேன் மாந்தோப்பு "
என்ற வர்ணமெட்டு

[S. Santiago]

(1) பெற்ருேர் பெரியோர்களே பெரியகுணம் உள்ளோர்களே
உற்ருர் உறவினரே ஊரில் வாழும் சீமான்களே-உண்மை
நான் ஓதுவதைக் கேட்டிடுங்கள் நன்மை.

(2) வரமா வரமிருந்தீர் வருந்தித் தவமிருந்தீர்
பரமனருளினுலே பாலகியைப் பெற்றெடுத்தீர்-அம்மா
பெண்பாலர்களைப் படிக்கவையும் சும்மா.

(3) அடுப்பூதும் பெண்களுக்கும் படிப்பெதற்கு என்று சொல்லி
தடித்தனமாய் வளர்த்து தாண்டி விளையாடவிடும்-தாயே
பெண்ணைத் தடை செய்யாமல் பள்ளிக்கனுப்புவாயே.

(4) உண்ண உணவளிப்பாய் ஊரில் விளையாட வைப்பாய்
பண்ணை வேலைசெய்ய உங்கள் பாப்பாவுக்கு சக்தி உண்டா-தாயே
கொஞ்சம் கவனித் தவளைப் பள்ளிக்கனுப்புவாயே.

(5) தின்னத் தீனி கொடுப்பாய் தெருவில் விளையாட வைப்பாய்
சின்னப் பிள்ளை என்ன வேலை செய்கிறது உங்களுக்கு-அம்மா
நல்ல புத்தி வளரும் பள்ளிக்கனுப்பு சும்மா.

(6) கட்டத் துணி கொடுப்பாய் காதில் நகைகள் தொடுப்பாய்
பொட்டப் பிள்ளைப் படித்துத்தானு பட்டமாளப்
போகுதென்பாய்-அம்மா
உங்கள் பொம்பளப் பிள்ளையைப் படிக்கவையும் சும்மா.

(7) செல்லமாய் வளர்த்திடுவாய் சீவிக் கொண்டை முடித்திடுவாய்
நல்ல பிள்ளை என்று பலர் நாளும் சொல்லப்பார்த்திடுவாய்
-அண்ணு
என்னை-நாலெழுத்துப் படிக்க வைத்தாலென்னு ?

(8) பத்து வயதுக்குள்ளே படிப்பை முடித்திடுவோம்
பத்து வயதுப்பிள்ளை பாடுபட்டுப் போட்டிடும்மா அம்மா-என்னை
பள்ளிக்கனுப்பிப் படிக்கவையே சும்மா.

(9) பட்டுப்பட்டாடைகளும் பதக்கம் வைத்த சரடுகளும்
பாடையோடு நின்று விடும்படிப்பே எந்தன் கூட வரும்-ஐயா
சிறு பாலகிகள் பாடும்பாட்டும் பொய்யா—(பெற்...)

Reg. No. M. 1534.

விளையாட்டுகளைக் கற்பிக்கும் முறை

[M. A. Amirthanathan]

விளையாட்டுக்களைப் போதிக்கத் தொடங்குங்கால் கீழ்க்கண்ட முறையை அனுசரித்தல் உசிதமாகும் :—

1. ஆதியில், விளையாடப்போகும் விளையாட்டின் பெயரையும், அதற்குக் காரணம் இருப்பின் அதையும் கூறுதல் வேண்டும்.

2. விளையாட்டைச் சுருக்கமாகவும், தெளிவாகவும், எளிய நடையிலும் சொல்லல் வேண்டும்.

3. ஒரு சிலரைக்கொண்டு, விளையாடும் விதத்தை மாதிரியாக காண்பிக்க வேண்டும்.

4. வகுப்பு பெரியதாயிருப்பின், அதைச் சிறு தொகுதிகளாய்ப் பிரித்தல் வேண்டும்.

5. ஒரு நேரத்தில் பல விளையாட்டுகளைப் போதிக்க முயலக்கூடாது.

6. விளையாட்டைக் குழந்தைகள் கண்டுபிடித்திருக்கிறார்களா என்று, வாய்மொழியாய்ச் சோதித்தல் வேண்டும்.

7. குழந்தைகளுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யவேண்டும்.

8. முழுச் சுயாதீனத்தை அளித்து, பிள்ளைகளை உற்சாகப்படுத்தவேண்டும்.

9. குழலை ஊதியவுடன், கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி, அமைதியை நிலவச்செய்யப் போதிய திறமை வேண்டும்.

10. புத்திசாலிகளையோ அல்லது ஒழுங்கான மாணவர்களையோ, தலைவர்களாய்த் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

11. ஒவ்வொரு கோஷ்டியும், தங்கள் தங்களுக்குத் தானே, முதன்மை ஸ்தானத்தைச் சம்பாதிக்கும்படி உற்சாகம் கொடுக்கவேண்டும்.

12. விளையாடுங்கால், பிழைகள் தோன்றின் அவைகளைத் திருத்தல்வேண்டும்.

13. குழந்தைகள் விளையாட்டை வெறுத்துத் தள்ளும்படி, நீண்டகாலத்திற்கு ஒரே விளையாட்டை நடத்துதல்கூடாது.

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T., Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis, Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. No. Ty.—1, 8—8—1946.